கடவுள் துணை.



கோயமுத்தூர் ஜில்லா பல்லடம் தாலூக்கா சாமளாபுரம்

மஜரா அய்யம்பாளையம் கோ வம்சத்தினர் ஜோதிடம்

அங்கபண்டாரத்தின் மகன்

அங்க பண்டாரம் அவர்களால்

இயற்றப்பட்ட

# வாழைத்தோட்டத்தையன் மாலை

601

இப்புத்தகத்தில் அற்புதமான

மாலை, ஆனந்த களிப்பு,

நொண்டிச் சிந்து,

காவடிச் சிந்து,

மாரியம்மன் பேரில்

கீர்த்தனைகளும்

விளங்கியதை பாடுகின்றவர்களை,

ஆனந்திக்கச் செய்யும்.

இஃது

...த்தூர் கிருஷ்ண விலாச பிரஸில்
...பதிப்பிக்கப்பட்டது.

1924 விலை அணா 4.

2 4 OCT 1924

023:4L7
N24.
181889

உ

சிவமயம்.

# வாழைத்தோட்டத்தையன் மாலை.

வானுலாவிய பான்மதியேவு டு
தானுலாவிய பூமண்டலம் நி றை
கானுலாவும் கரிமுகனார் பத ம்
தானுலாவு நற்றாள் சரணங்களே.

## கடவுள் துதி.

ஆதியந்தம் நிறைந்தவன் பொன்ன டி
வேதன்மாலரன் வேலவன் பொன்ன டி
ஓதிவைத்தகுரு சாமிதன் பொன்ன டி
நீதியாகவும் நின்னடிபோற்றினே ன்

மார்களித்திரு வாதிரைநாளினி ல்
ஆருத்திரமான நட்டேசர் தெருசன ம்
நீர்தரித்த சிவன்வரம் பெற்றவ ர்
பேர்நிறைந்த வுலகினிற்பண்டித ர்

## ஐயன வரலாறு.

கங்கைசுதன்காருளமென்ற கலியுகமதில் கடவுளருள் செயல் கிருபையால், கலிகாலந்தன்னிலுன் தாய்வயற்றினிற்ஜெனித்தையனெனுந் தெய்வமாகி, கோங்குலகில்மீதையன்பதியினிற்குடிகொண்ட குருநமசிவிங்க வடிவாய், கோவுனுடகொம்பினால் முத்திபெற்றையனே கோடானகோடி பேர்க்கு, குருபரனாவுன்பாதம் தஞ்சமென்றோர்வினை கொடுத்திடும் நீரெடுத்து, குணமாகுமுடம்பெங்கும்பூசிவரவுள்ளே குடித்திடவிஷங்களோடும், சங்கரன் கிருபைபெற்றையனே யுன்பாதம் சரணஞ் செய்திட்டபேர்க்கு, சாயூச்சிய பதவியும் புத்திரசம்பத்தை நீதந்து வச்சித்திடுவையே.

அருந்தவம்புரிந்தமாதவத்தோர்க ளனுதினம் வாழை மரம் பதியில், இருந்தருள்புரிந்துவழர்ந்த செங்கிருநவை யிருக்குந்தமாமதுநிழலாம், குளிர்ந்தபூங்காவிலிருந்திடுமையன் கோடான்கோடிபேர் தமக்கு, வரந்தருவாரேவல் வினைதீர்க்க வழருந்தேபுற்றோன் றுவலமாய்.
(1)

புற்றுநீரெடுத்துமெய்யினிலணிந்தால் பிணியெலாமுடம்பை விட்டோடும், உற்று நீ பார்த்தால்விஷமதுவிலகி ஓடுமேயனியது

போலே, நற்றவம்புரிந்த ஐயனைத்தொழுக நாடியே வருகிறவ
க்கு, குற்றமேதீர வரந்தருவாரே குருவெனும் வாழைமாம்ப
யே. (2)

நித்தியகாலம் பூசைகள்செய்து நீரதையெடுத்திடும்பேர்கள்
பத்தியாய் மனதில் நெத்தியிலணிந்தால் பரக்குமேயிலவம் பஞ்சு
போல், சுத்தியேவந்து ஐயனைத்தொழுக அூவேபிணியதுவிலகி,
புத்தியுக்கொடுத்த உத்தமரான புண்ணியாவாழைமாம்பதியே (3)

காலையில் பாலும் பழ மது தேனும் சற்கண்டுசக்கரைபொங்
கல், மாலயகருளால வரந்தருமையன் வந்தவர் பிணியெலாம் வில
க்கி, சாலவே பாதமெருசனைதந்து தயவதுசெய்து நீரையா, கால
னைவிலக்க வரந்தருவாரே கர்த்தனே வாழைமாம்பதியே (4)

ஆலயம்நதியு மவர்திருப்பணியுமளகுள்ள கெங்கை விஷத்
தரம், வேலைசூள் சித்திரசாவடி மடங்கள் வேண்டியே வந்தவ
ரிருக்க, சோலைமாங்கனி தேங்காயுடன் பழங்கள் தூப னவேத்
தியஞ் செய்திடுவோர், பாலனைக்காக்கவரந்தருவாயே பண்டிதா
வாழைமாம்பதியே. (5)

தினமுனைநம்பியிருந்திடும்பேர்க்கு சிந்தைநோய்வினையதை
விலக்கி, மனந்தனில் வருமை வந்திடாதிருக்க மலர்ப்பதம் தந்து
நீயாள்வாய், உனதிடமருமையொருவருமரியா ருலகினில் புண்
ணியாயார்க்கு, குணமதுசெய்து வரந்தருமையா குருபரா வாழை
மாம்பதியே. (6)

நாடியுன்பாதம் தேடியே வந்து நாதனேயுனைப் பணிந்தோர்
க்கு, நீடியகுட்டம்நோய்பெரும்பிணிகள் நீரதுபட்ட மாத்திரத்
தில், ஓடியேபோகுமுன்னிட அருளாலுத்தமரான பண்டிதரூய்,
தேடியுன்பாதம்தெருசனைதருவாய் தேசிகாவாழைமாம்பதியே(7)

யோகமேசெய்து நிஷட்டையிலிருந்து நோயெனும் பிணி
களையெல்லாம், தாகமாயுந்தன் நீரதுபடவே தயவதுசெய்து
நீரையா, வேகமாயெந்த வினைகளைப்போக்கி வேண்டியே வந்த
வர் தமக்கு, நாகமுவிஷத்தை நீக்கிடுவாயே நாதனே வாழைமாம்
பதியே. (8)

பண்டிதனென்று வுலகினில் யாரும் பத்தியாய் மனதினிலெ
ண்ணி, யெண்டிசையோர்கள் வந்துனைப்போற்றியேங்கியே தவிப்
பதைக்கண்டு, கண்டிதப்படுத்தாய் விஷமதை விலக்கி கர்த்தனே
ஆதரித்திடுவாய், அண்டியேயுன்னைவந்தவர்தமக்கு அருள்தரும்
வாழைமாம்பதியே. (9)

ஆவெனும் பசுவாலடங்கிய சித்தாயமர்ந்தருள்புரிந்திடுமை ன், பூவெனு மலர்கொண்டர்ச்சனை புரிந்துபோற்றியே யுனைப்ப ணிந்தோர்க்கு, நோயெனுமீளை வாந்தியும் குன்மம் நோக்கி யிரு கண்ணால்பார்த்து, போவெனும்படிக்கி நீரதை கொடுப்பாய் புண் ணியா வாழைமாம்பதியே. (10)

அத்தருபன்னீர் புனுகுசவ்வாது அனுதினம் மெய்யினில ணிந்தாய், பத்தர்கள் யாரும் நித்தியமுனது பணிவிடைசெய்து வந்தோர்க்கு, நித்தியகாலமன்னவஸ்த்திரமும் நீ கொடுத்தாதரி யையா, சித்தமுமிரங்கி வரந்தருவாயே சிவசிவா வாழைமாம்பதி யே. (11)

வையகந்தன்னில் மெய்யென விழங்கும் வாழைமாநதியெ னும்பதியில், மெய்யனே யுன்னை வேண்டி வந்தோர்க்கு விரும்பி யே அன்னமுங் கொடுப்பாய், அய்யனே யுந்தனுதரவெனக்கு அனுதினம் நீ கொடுத்தாளும், பையனெனெந்தன் பாடலுக்கிரங்கி பரமனே வாழைமாம்பதியே. (12)

நித்தியமுனையே பத்தர்கள் தினமும் நினைவது யுந்தன்மே லிருக்க, பத்தியில் சிரந்த உத்தமருன பண்டிதரொன்று பேருல கில், முத்திபெற்றையா மோதுகால் வீய்க்கம் முளிதனில் திரண் டிருந்தாலும், வத்தியேபோகும் நீரதைப் பூச வர்த்தம்போம் வாழைமாம்பதியே. (13)

சிரசினில் மேகம் நீரதை விலக்கும் சித்தருல் முத்திபெற் றையா, கரமதை நீட்டி தாவியே யென்னை கர்த்தனே ஆதரித்த ருள்செய், பரமனேயுனது பாத தாமரையை பணிந்து நானுன் னடி போற்றி, அரகரா அருளே ஆனந்தமூர்த்தி அய்யனே வா ழைமாம்பதியே. (14)

பணிவிடைசெய்து பத்திர புஸ்பம் பரித்துமே கொண்டு வந்துமக்கு அணிந்திடும் பாதமர்ச்சனைபுரிந்து அரகரவென்று னைப்போற்றி இனி நமக்குனது ஜெயமது தருவா யீசனே கயிலை வாசகனே, துணிவு பெற்றோங்கும் அய்யமாம்பதியில் ஜோசியா வாழைமாம்பதியே (15)

நாகமுஞ்சாரைவிரியனும் சுரட்டை நாடியே கடித்திட வந் தால், வேகமாயுந்தன் நீரதை யெடுத்து மெய்யின்மேலெரிந்து விட்டாலும், சோகமாய்க்கிடந்து சொக்கியே மயங்கி சுருண்டு டல் நிமர்ந்து நின்றோடும், யோகமேபுரிந்த ஐயாம்பதியில் யோக னே வாழையம்பதியே. (16)

சளையுமிடுப்புவலி சொர்ரோகு யிருமல் நெஞ்சடைப்பு கிராந்தி சூலையும் மேகம வாய்வொடு பித்தம் சோகை காமா கண்நெரிவு, யேளைபசுகாழவெனேர்ச்சித்தாழயேமன் வங்கனுமிட இருக்க, வேழைவந்துதவாதிருந்திடவேண்டாம் வேந்தனே வா ழைமாம்பதியே. (17)

பாலது தயிர் நெய் பழம் புஜைகம் பத்தியாய் வந்து செய்தி டுவோர், ஆலமுதான விஷமதை விலக்கி அருந்தவம் புரிந்தமெய் ப்பொருளே, பாலனைக்கார்த்து பதியினிலிருக்கும் பரமனே நீ ரதையெடுத்து, மேலெங்குமபூச வீக்கமும் விஷமும் விலக்கும் நீர்வாழைமாம்பதியே. (18)

எலிகடி பூரான் செய்யா னொடுதேளு இதுகடிபட்டு வந்தவர் க்கு, கலியுகமதனிலுனதுபேர் விளங்கும் காரணமமைந்த மெய்ப் பொருளே, வலியுடன் கடுப்புநோயெனும் குடைச்சல் மனதி னில் நினைந்திடவுன்னை, கிலிபிடித்ததுவுமோடுமே அய்யா நீத னே வாழைமாம்பதியே. (19)

கண்டத்தில் வருகும் தொண்டை நோய்நீரும் காது கேளா து கண்மாலே, பண்டிதரென்று உந்தனைநாடி பணிந்திடும் பேர் வினைவிலக்கி, தண்டமிள் மாலையுந்தன்மேல் சூடி தயவதுகருணை செய்யையா, மண்டலந்தன்னிலென் கலியகற்றும் வாழைமா நதி யெனும் பதியே. (20)

மார்பினில்குத்துநோயுட னடைப்புமாதருல் வந்திடுமயக்கம் பார்புவியோர்களுனைவிடவேறே பண்டிதத்துரையென நம்பி, ஆர் தொளுதாலுமவரவர் வினைக்கியனுதினம் நீரதுதருவாய், நீருமே சகலநோய்பிணியெல்லாம் தீர்த்தருள் வாழைமாம்பதியே. (21)

இடுப்பதுவலியும் குடைச்சலும் குத்தும் இது பிணி வந்த வர்தமக்கு, கடுப்பெனும் சீதம்ரத்தமுங் கண்டால் கர்ததனே யுன்னிட நீறால், சடுக்கெனவிலக்கும் துடுக்குடன்நடத்தும் சாமி யே பெலமதுதருவாய், குடிக்கும் நீர்வாமும் அய்யமாம்பதியில குருநமசிவாயமே அய்யா. (22)

பல்லடந்தாலூக்காவெனும் கிறமம் பதியெனும் சாமளாபுர மாம், சொல்வது பெரியூரையமாம் பதியில் சுத்தமெஞ் ஞான சின்மயமே, வல்லவர் தமக்கு மக்களாமெட்டுபேருடனே ரண்டு பெண்ணும், அல்லலையகற்று மருள் தருங் குருவே அய்யனே வாழைமாம்பதியே. (23)

நடந்திடும் பாதம் நொந்திடாதிருந்தால் நான் வந்து தொளு வது மெய்யா, தடமது காட்டி துனைநமக்கிருந்து தருணமுமிது

வேளையையா, விடமதை நீக்கி மெய்யனே யெனக்கு விரும்பியே அருளது தருவாய், இடர்வினையகற்றி தீர்த்திடுமெய்யா ஈசனே வாழைமாம்பதியே. (24)

பஞ்சபாதகமும் நெஞ்சினில் வைத்த பாதகர் தன்வினை தனக்கு, நெஞ்சம் விட்டகலாதிருக்மே அய்யா நின்பதம் கிடைப்பது பொய்யா, குஞ்சித பாதம் தஞ்சமென்றோர்க்கு கொடுப்பது நிசமதுமெய்யா, அஞ்சி நின்றோர்க்கு அருள்தருங் குருவே அய்யனே வாழைமாம்பதியே. (25)

வருகிறவழியில் திருடர்கள்கூடி வாதைகள் செய்வதாயிருந்தால், குருபருவுன்னை நினைந்து தன் மனதில் கூப்பிடும்வேளையில் வந்து, தெருவினிலோட்டி அவர்களை மிரட்டி சித்தம்வைத்தாள்குவாய் துரையே, அரமதுசெய்த தர்மனே அய்யா அருள்தரும வாளைமாம்பதியே. (26)

(கண்டத்தில் வருகும் தொண்டைநோய் நீருகாதுகேளாது கண்மாலை).

பேய்கள் பிசாசு பிரமறுச்சதைகள் பிடித்திடுமாதர்கள் தமக்கு, தாய் தந்தைபோலே நீ துணையிருந்து சடாச்சர அருளது நாவே, மாயமாயோட்டி மாதர்கள் தமக்கு மைந்தர் பாக்கியமது தந்து, காயமே சித்திபெற்றிடுமையா கர்த்தனே வாழைமாம்பதியே (27)

காத்துடன் மழையுமின்னலுமிடியும் கர்த்தனே வரும்வழி தனிலே, தோத்திரம் செய்வேனடியனைக்காத்து துணையது நீ நமக்கிருந்து, நேத்திரந்தன்னில் நீரதை விலக்கும் நிமலனேகண்ணொளி தருவாய், பார்த்திபா யெங்குமுனதுபேர் விழங்கும் பண்டித வாழைமாம்பதியே. (28)

குருவெனுமையன் பதியினில் வாழும் கோலெனும் சாதியில்பிறந்த, அருள்தரும் வாணி கிருபையால் தொண்டன் அங்கன யான் பாடிய மாலை, தருகுவாய் சுகமுமன்ன வஸ்த்திரமும தந்து நீருள்வதுன் கடமை, பெருகு நீரையன்பதியினில் மேவு தர்மனே வாழைமாம்பதியே. (29)

கொங்குலகதனிலெங்கும் பேர்விழங்கும் கோயமுத்தூரெனுஞ் ஜில்லா, தங்கமாமச்சுசாலையார் சமுஹத்தானமும்நாடிநான் வந்து, யெங்கும் பேர் விளங்கும் வாழையாந் தோட்டத்தையன் மேல் கவிகள் முப்பதுவும், பொங்கரவணிந்த சங்கரன் பாதம் போற்றினேன் துணைநமக்கதுவே. (30)

மாலை முற்றிற்று.

# ஆனந்தகளிப்பு.

அரகரா அரகரா சம்போ சிவ அரகரா அரகரா அரகரா சம்போ.

வாள்வு தரும் வாழைநகர் நதியாம் இதின்
மாமுனிவர் தேவர் விளையாடுமையன் பதியாம்
கோவுநருள் பெற்றிடுஞ் சன்னதியாம் ஐயன்
குருவாக நின்றாரே வுலகெங்கு மெய்யா (அரகரா)

பார்பெருகு மிக்க பெருஞ்சோதி ஐயன்
பதியில் வழர் வாழையெனுந்தோட்டமுன்னாதி
நீதிமிகு ஆலயமுங் கோவில் ஐயன்
நிருகருமபதி மூளைத்தமாங்கிருவை பூங்காவில் (அரகரா)

சோடுபிரியாத அன்னப்பேடு மலர்
சோலைகளிர் கூடிவிளையாடி யிடந்தேடும்
மாடப்புறாவினங்கள் சேர்ந்து வரும்
வண்டினங்கள் தேன்மதுவை யுண்டு உக்கார்ந்து (அரகரா)

சந்தோசமாய்க் கீதம்பாடி ஐயன்
சன்னதியின் முன்னாக வந்து கவிபாடி
யெண்டிசையிலோர்களுனைப்போற்றி அவ
செங்குமுனை ததேடியே வந்தோர்களைக் காப்பாற்றி (அரகரா)

அய்யனே யுன்பாதம் போற்றி தஞ்சம்
அனுதினமு மடியேனை அன்புடன் காப்பாற்றி
மல்லிகை முல்லை யிருவாச்சி கொண்டு
வருவார்கள் சன்னதி முன் தருவாய் நீ காச்சி (அரகரா)

யேனைக்கிரங்கு மனதையா மெத்த
இதுவேளை வநது பதம தரவேணுமெய்யா
அன்புடனுனைப் பணிந்தபேர்க்கு மெத்த
ஆதரவு தந்து ல்ச்சித்திடுவாய் யார்க்கு (அரகரா)

அரவமுனைப்பணிந்தாடுமையா சிவன்
ஆபரணமாகவுமே தரித்தாரே மெய்ய
கோவில் வலஞ்சுற்றியே வந்தார் கை
கும்பிட்டு நின்று மனதுன் பதம் பணிந்தார் (அரகரா)

அய்யனே சன்னதி முன் யாரும் உமக்
கனுதினமும் பணிவிடைகள் செய்திடுவர் யாரும்
மெய்யனே யுனை நம்பினோர்க்கு கிட்ட
வேருவிஷமணுகாது நீருபட்டபேர்க்கு (அரகரா).

அய்யனே யுன்மகுமையாவே யெனக்
கருள் தருக வருக வுனக்கடுமைகளின்மேலே
மெய்யனே யுனை வேண்டிக்கொண்டு மெத்த
வெகு நாளுனக்கடிமை செய்தாரே தொண்டு (அரகரா).

புனுகு சவ்வா தணியும்மேனி அய்யன
புகழ்ந்த மனமிகுந்ததனக் கையன்பதிகாணி
கருணைமொழி ஞானப்பிரதாப கல்வி
கற்றவர்க்கருள் தருக வுற்றதுணைஞாப (அரகரா)

வேதமொழி தவிருத மெய்யா யெம
வேதனை வந்தணுகாமல் கார்த்திடு நீரையா
நந்தியுட கொம்பாவே முத்தி அய்யன்
நாடெங்கும் பேர்விழங்கு அடைந்தாரே சித்தி (அரகரா)

வருவார்களுனைத் தேடியையா வரும்
வந்தவர் வல்வினைகள தீர்த்திடு நீரையா
வைப்புக் கடப்பு முனைக்கண்டால் உன்
வலப்பக்கம் வழருதே புற்று நீருண்டால் (அரகரா)

ஓடி பில்லி குனியமுந்தானும் மற்
றொருத்தலையும் பிடனிவலியுட நிர்க்கவேணும்
ஈளையிருமலுடன் குஸ்ட்டம மற்
றெவ்வகைப் பிணியுற்று வுடம்பெல்லாம் கஸ்ட்டம் (அரகரா)

கோழையுடன் நெஞ்செரிவு குன்மம் அய்யன்
குணமசெய்துவிட்டாலு முனக்குண்டு தர்மம்
பேய் வீக்கம் உளது காமாலை மனம்
பிரட்டிவிடும் வயற்றுவலி வரந்தியுடன் கோரளை (அரகரா)

இது நோய்களுனைக் கண்டதாலே குடிவிட்
டேகியே யோடுமது நீருபட்டதாலே
பேய் நரி நாய் கடி தீர்த்த புண்ணியா உம்மை
பேணிவந்தோர்கள் வினைதீர்த்திடுவாய் கெண்யா (அரகரா)

நாகமே சாரையுடன் கூடி உம்மை
நாடியே சனனதி முன்பாதமதுதேடி
கொம்பேரி விரியன் கண்ணுடி இதை
கூப்பிட்டளைத்து நீ ராட்டவும் பண்ணுடி (அரகரா)

திங்கள் வாரந்தோரு மும்மை மெத்த
தேடிவருவார்கள் வெகுபேர்களுக்கு நன்மை
கொங்குலகில் மீதிலையமபதியில் நீர்
குடிகொண்ட கதலிவனந்தோட்ட முன்நதியில் (அரகரா)

(ஆனந்த களிப்பு முற்றிற்று.)

# நொண்டி.

---

அய்யாமகருசா | உன
திருமைப் புதல்வர்களும் புத்திரிகளும்
வருவார்களுனைதேடி | உலகினில்
வந்தவர் வினையகற்றும் தந்தை தாய்போல்
குருவே யுன்பாதம் போற்றி | யென்னைக்
கொண்டணைத்துக் காருமென மண்டலந்தன்னில்
அய்யாவுன் சன்னதியில் | வலப்பக்கம்
ஆனந்தம் பொருக்துங் கிணேசன் கோயில்
சுற்றிலுந் திருமதிலும் | மேலே
சூள்ந்திடும் கோபுரம் சிகரங்களும்
வருவார் தொளுவார்கள் | ஐயனென்று
வணங்கிடுவார் மெத்த பயமுடனே
தருவாய் நீ சுகமும் | வந்தவர்க்கு
சகல பிணி விசமும் நீங்கிடுமே
அய்யாவுலகினிலே | மறவாமல்
அனுதினம் நினைப்பவர் மனதினிலே
நீயே துணையிருந்து | வந்தவர்க்கு
நீக்கிடுவாய் வினை போக்கிடுவாய்
ஓடி பில்லி சூனியமும் | உனை நினைத்தால்
லொட்டாது கிட்ட வர யெட்டாதுபோம்
மெய்யாயுனைப்பணிந்த | பேர்க்குதவி
வித்தைகளும் புத்திகளு மெத்தத்தருவாய்
யைய னெளுதிடுங்கவிக்கி | யென்முகம்
பார்த்தருள்புரிந்திடவேணுமையா
யேளைமுகம் பார்த்து | யெனக்
கிருந்தருள்புரிந்திட வேணுமென்றே
மெய்யாயுனைப் பணிந்தேன் | நான்
வேண்டுவதுன் பாதம் ஆண்டிடுவாய்
அய்யாகினவினிலே | யெனக்
கருள்து தருக வுன் மனதினிலே
தயவது செயயவேணும் | உன் பாதம்
தஞ்ச மென்றுனைப் பணிந்து சரணஞ் செய்வேன்
(அய்யா மகருஜ)

---

# காவடி சிந்து.

## விநாயகர் துதி.

தெள்ளுதமிழுக்குதவு சீலன் யென்ற வர்ணமெட்
காரண முகம் படைத்த யீசா — வலப்
பக்கமாயிருந்திடுங்கிணேசா — உன
பூரணம் பொருந்துங் கயிலாயகிரிமேவிவழர்-வாச-கயிலாசா.

## சுப்பிரமணியர் துதி.

தென்பழனி ஆறுமுக வேலா — தெய்
வானை குறவள்ளி மணவாளா — உன்
சேவல்மயில்மீதிலேறி ஆவலுடன் சுற்றுங்கிரி-வேலா-அனுகூலா

## விஷ்ணு துதி.

பார்க்கடலில் பள்ளிகொண்ட மாயா — பத்ம
ஆசனத்தின் மீதிருந்த சேயா — இந்தப்
பாருலகிலோரடிமண் நீயளந்த நின்றபெரும்-வாதிரு-நேயா.

சித்தர்கள் முதன் முத்திபெரும் வாசன் — ஐயன்
பதியில் சிறந்த மிருநேசன் — இனி
சிறுங்கவி மலர்கள் சூளும் புலமணிந்த-போசன்-ஜெகதீசன்.

தினம் தினம் துதிக்குமவர் கோரும் — சுகம்
கனம் பொருந்தி வாள்பவர்கள் யாரும் — இனி
செளிப்ப மிகவழகும் தளைக்கும் மையன்பதிக்கு-வருவார்-சுகம் பெருவார்.

கதிக்கும் கதலி வாழைத் தோட்டம் — ஐயன்
பதிக்கு வருவார்கள் ஜனக்கூட்டம் — மெத்த
காருந் துணையிருந்து நீயும் தயவுசெய்தால்-போதும்-தமி ளோதும்.

கடையுங் கடைத்தெருவும் பாரும் — கேணி
மடையிலிருந்து பள்ளம் நேரும் — சலம்
வருகும் கரைபெருகி அருகில் பெரியகுளம்-தேடும்-தண்ணீ ரோடும்.

வெள்ளி திங்கள் வாரம்பூஜெகம் — தனம்
வேண்டுவர் கொடுக்கும் பணம்யோகம் — ஐயன்
மேதினியில் யாவருக்கும் தீருவினை தீருமந்த மருந்து-புத்து-மருந்து.

தேடிவருவார்கள் மெத்தப்பேரு — இந்து
தேச மதிலையன்பதி யூரு — வழர்

செளிக்குஞ் சன்னதியின்முன் கிளைக்கு மணி நிறைந்த-வேலு-
சத்திவேலும்.

கோலவிளி மாதர்களும் கூடி திரு
கோவிலுக்குப் போக மனம் நாடி உனைத்
தேடிவரும் மாதருடனேடிவிளை யாடும்பலர் வரவே-கூட-வரவே

சுற்றிலுஞ் சிறந்த திருமடமும் இடம்
மத்திலிருக்குந் தண்ணீர்த் தடமும் மெத்த
சூள்ந்துவரும் பேர்களுடனளந்த கெங்கை தீர்த்தந்தலை
குளித்து-உனை-துதித்து

அத்தரு புனுகணிந்தவாசன் தினம்
அன்பர்கள் துதிக்கும் செகதீசன் உன்
பத்தருட சித்தமதில் நித்திய கடனம்புரிந்த-வாசன்-கயிலாசன்

கங்காமுருகவத்துதித்த பாலன் கலை
வாணியருள்பெற்றனுகூலன நான்
வந்துபணிந் தேயுனது செந்தாமரைப் பாதமது துதித்தேன்-
சிந்து-படித்தேன்

யெந்தன் கவிதீர்கதிடுநீரையா யெனை
யேமன்வந்தணுகாமல் நீர் மெய்யா உன்
சுந்திரம் பொருந்துதிவ்விய இந்திரன் பதிக்குநிக ருமே-
சொல்லுவோமே.

பொன்னிலவுசென்னிகுள யென்ற வர்ணமெட்டு.

வெண்பா.

இந்துரவிகூ ளுலக மெங்குந்துதித்தோங்கு ங்
கந்த மிகுமைய்யன்மேல் காவடியின் சிந்துரைக்க
வந்துதவுமைந்துகர தொந்திவயர் முந்திவழர்
தந்திமுகன்றுளே சரண்.

விருத்தம்.

புரிதிமதி நடனமிடு வுலகின்மீது
பண்மைமிகுமாமையன் பதியின்மேவும்
பெருமைமிகு வாழைமாந்தோட்டத்தையன்
பேரின்மேல் சிந்து கவிபாடியாட
கருணைமிகு வுலகெலா மிகுந்தசோதி
கடவுளுமை பாலனெனவே விளங்கும்
முருகனுட தமையனெனு மானையானை
முகத்துடையோ நிருபாதம் காப்பதாமே.

வாலையைத் துதித்துமன தேஙயத்தில் நீயிருந்து
வாக்கு வரம் நீ கொடுக்கவேணுமே. உன்
வாக்கியம்பெற் றென்னுவ தனைமேல் பாடுமே.
வச்சிரபதம மெச்சித்தரு
பச்சத்துடன் வச்சிதமெனை
பாடவுமருள் கொடுக்க நீயுமே உன்
ஆதரவெனக இருக்கவேணுமே.

செந்தாமரைப் புஸ்பத்திலுரைந்திருக்கும வச்சிமிக்கி
தேவர்யானை கொண்டுவரும் தீர்த்தமும் இருபுரமின்
றாத்துமாம் தங்கக்குடங்கள பாத்திரமும்
செந்தேனே மடமானே
தனுசானே ரசந்தானே உனை
சேவித்துப்பணிந்தபேர் யதார்த்தமும் சுகம்
நீ கொடுக்கும பால்பழம் பதார்த்தமும்.

அய்யன்பதிதன்னில்வழூர் மெய்யெனும் வாழைத் தோட்டத்து
அய்யனேவுந்தனை நம்பினேனே யெனக்
காதரவுசெயதிடுவாய்தானே
அய்யாதிரு மெய்யர்துணை
செயவாய்மன தையாமன
சிந்தையகவாத அய்யன்தானே உனை
வந்துதொளுதே பணிகின்றேனே.

தஞ்சமென்றுனைப்பணியும் பஞ்சைகள் படுந்துயராம்
சஞ்சலமமகற்றுமையனே மன
வஞ்சகத்தை நீக்கு மெய்யனே
வாடுவார்ஜன்ம தேடுவாருனை
கூடுவார்கொண் டாடுவாரபு
ஜேகமும் நடக்குந் தினம்தானே வந்
தாதரவு செய்த புண்யவானே.

பெருக்கமாயிருக்கும் பதி மூலைத்தமாங்கிறுவை மாம்
பூத்திடும வாசனை தங்குமே பால்
மணக்குமே பூவுலகெங்குமே
பொருந்தும்மன மிருந்துதவம்
புரிந்தமாம் தளைந்த இடம்
புற்றுகளுண்டான தங்குமே நீலையள்ளி
நெற்றியிலணிந்தால் விஷமோடுமே.

நஞ்சையுண்ட அய்யன் பாதம் தஞ்சமென் றுனைப் பணிந்து
காதனேயிவ்வேளைமுகம் பாருமே பாது

காருமே யிவ்வேளைவந்து தீருமே
நாடுவார்பதி தேடுவார்ஜனம்
கூடுவார்நீர் போடுவார்தினம்
நான்முகனெழுத்தின்படி தோருமே உனை
நாடி வந்தபேர்கள் கவிதீருமே,

திங்கள் வாரமெங்குஞ் சனம் மங்கையர் தேங்காய்களுடன்
சங்கமாய் வருவதுகண்பாருமே வந்து
தங்குவாரிச்சன்னதி முன்யாருமே
தீயநோயனு காமலுன்னிரு
பாதமேதினம் நாளுந்துதிபெர
நாடியே வருகிறார்கள் யாருமே வந்து
தேடியே உனைப்பணிந்தபேருமே.

நாடிவரும் பேர்களுக்கு தேடிவந்தருள் தருகும்
நாட்டினில்பேர்கொண்ட அய்யனே தலைபை
யோட்டிவைக்கும் யெந்தன் மெய்யனே
நாகதாதினம் நீதாமெனை
மீதேசுகம் தாதாகுரு
நாதனேயுனைப்பணிந் தாரையனே பொற்
பாதனே யுனைற்துதித்தேன்மெய்ய னே.

மண்டைபிடி தொண்டைவலி கண்டத்தில் வரும்பிணிக்கு
மைந்தரைக்கார்தாள்குவாயை யா நீருபட்டால்
தெண்டினைப்பட்டோடுமே மெய்யா
மனமானது தினமேயுனை
பணிவோர்களும் பெருவார்பெரு
வாள்வுதந்துஆள்வதேமெய்யா யெனக்
காதரவுவந்துகாரையா.

நாகபாம்புசாரையுடன் நற்சுருட்டை வில்லருணை
நஞ்சுவிஷம் நீக்கிடுநீரையனே யேனை
பஞ்சைகளைக்கார்த்தருளும் மெய்னே
பாருந்திரு ணீரும்பட
வேரும்அர வோடும்விஷம்
நஞ்சையுமிர்க்கிடுவாரையனே கடி
வாயில் விஷம் நீக்கிடுவார் மெய்யனே.

சுக்கிரவாரந் தன்னிலே முக்கண்ணுடன் தேங்காய் பழமும்
சூல்ந்துவரும் பொங்கல் வெகு நேத்தியே வெகு
பத்தியோடு செய்யும் பூசை மாத்தியே
சூளும்ஜனம் நாளுந்தினம்

பாலும்பழம் தேனும்வரும்
தாமரைப்பாதத்தில் மலர்சாத்தியே உனை
நேமமாய்த்துத்தவர்கள் நேத்தியே.

அத்தருபுனுகு பன்னீர் மெத்தவே சவ்வாது அன்பர்
அணியும புஜேகவாச மே பரிமளாதி
அய்யன்பதி தன்னில் வீசுமே
அரவோவுர வாடுங்குணம்
வருவார்கவி பாடுந்தினம்
பொங்கிய மாமாங்கம போலுமே அரு
ளைதருமே வாசங்கள் வீசுமே.

காதுக்குத்தல் கண்ணெருச்சல் கண்டாமாலை விப்பிரிதிவினை
கார்த்திடுகைதலி வனத்தையனே வினை
தீர்த்திடுங்கலியுகத்தில் மெய்யனே
காருந்திரு நீருமரும்
தாருந்தொழத் தீரும்விஷம்
கர்த்துவச்சித்தாழவந்தனே னே பத்ம
ஆசனத்தின்மீதிருந்த சேயனே.

வையகத்தில் பேர்விழுங்கும் வாழைத் தோட்டத்தைய யென்று
வருகுந்த சனங்கள பெருங் கூட்டமே வல
கெங்குமே நிரைந்திடுங் கொண்டாட்டமே
அருள்மாதவ ரிவர்மேவிய
தவமாமுனி மறையோதிய
அடைந்திடுமவருடைய தோட்டமே பக்தி
புரிந்திடுவோர் தங்கள் வினையோட்டமே.

சூலைநோயிடுப்புவலி யின்னும் கெண்டைக்கால் குடைச்சல்
இப்படிக்கி வந்திடும் பேர் தங்களை மன
மொப்பியே பார்த்திடுங்கண்ணுலெங்களை
உலகில் யாவரு முனது திருவடி
தவரிடாமலு உனது திருவடி
பக்கமாயிருக்குங்கன்னிமார்களே தினம்
மிக்கவே பூசித்திடும் பேர் நாங்களே.

சிந்தையில் நினைந்தவர்க் குகந்துவரந்தந்தருளும்
தீர்த்தக் கெங்கை தன்னில் மூள்கி வந்தவர் உனை
போற்றிவலஞ் சுற்றிவந்து நின்றவர்
பூரணன்கிரு பாகரன்தரு
ஞானவென்குரு வானபண்டித

காதனே யுனைப்பணிந்துபோற்றுவார் தினம்
காடிவந்த பேர்கள் கலி யாற்றுவார்.

பேய்களும் பிசாசுகளும் மாய்கையாக்கினவினில்
பிரியமாய்ப் பெண்கள்மே விளையாடுமே ஐயன்
பதியினிலோங்காரச் சததம் போடுமே
போடுங்குரு நாதன்திரு
நீருஞ்சிரம் மீதில்விழ
போகுமே யிலவம் பஞ்சுபோலுமே பேய்க
ளாடுமே சூளைக் காற்றைப்போலோடுமே.

பாருலகந்தன்னிலேபெருஞ் ஞானகுருவாடினவடி
பண்டித்துறையை நாடிவந்தவர் மனச்
சிந்தையிலடக்கியன்புகொண்டவர்
நம்புவார்மன தன்பருகிய
இன்பமேதரு துன்பமேதினி
நஞ்சையுமிரக்கியருள் கொண்டவர் சுகம்
தருதுமேவுலகம் ரச்சிக்கின்றவர்.

கொங்குதேசந்தன்னிலே தானிங்குமே சனங்கள் வரும்
கூடுகட்டிய மாட்டின் வண்டி பூட்டியே துருசா
ரோட்டின்வழி மார்க்கமாக வோட்டியே
கூடும்பெரு மாடங்களி
லாடுமன்னப் பேடும்விளை
யாடியே குயில்போல் ருகம் பாடியே நெஞ்சில்
தேடியே யுன்பாதமலர் சூடியே.

சுந்திரப்பொருந் மழகிந்திரன்பதியை மெச்சும்
தேவர்கள் முனிவோர் வாள்த்தும் சத்திரம் அனனப்
பூவுகளால் கோத்திளைத்த சித்திரம்
பூவுந்திரு மடமாய்பெரு
வாசந்தரு மிடமாமிது
பூங்காவனம் சூள்ந்த தவச்சேஸ்த்திரம் தினம்
நீங்காமலிருக்குஞ்சனம் மாத்திரம்.

உந்தன் சன்னதி முன்பாக வந்தவர் வினையுந் தீர்ந்து
உலகினில் பேர்கொண்ட புண்ணியா மகா
யோகமுள்ள பேர்விளங்கிய கெண்ணியா
உந்தன் திரு வடிதந்தெனை
மைந்தன் கவிக் கருள் தந்திட
உன்னையேதினமுமன தெண்ணியே நான்
பண்ணிய பாவங்களை நீ மன்னியே.

சித்தமூ ரூனைத்துதித்த பத்தர்கள் சித்தத்தினி
விருந்தருள் புரிந்திடுங்கண்ணுளுமே வெகு
பக்தியோடிருந்தால் வினைதீருமே
பத்தருகிய நிததமேவிய
புத்திகங்கரு ளுத்தமன்றிரு
பாதமே தொழுதிடுவோர் நாளுமே நாட்டில்
நாகமே கடித்தால் விஷந்தீருமே.

வையகத்திலே யன்பதிமெய்யென விழங்குமையன்
மண்டலத்தில் பேர் விழங்கி நின்றவர் அவ
ரெண்டிசையில் பண்டிதத்தில் வல்லவர்
இருக்குமபதி பெருக்சமருள்
சுரக்கும்முலே காக்கும்பசு
தோகையர் பால்கொண்டு வருகின்றவர் அய்யன்
பாதபூசைசெய்து தொழுகின்றவர்.

சொந்தமுள்ள மக்கள் மருமக்களுட மக்களுமாய்
தொல்லுகிலேயன் பதிவாள்குவார் உம்மை
தோத்திரம் செய்தே பணிந்துதாள்குவார்
சொரிந்தமலர் குனிந்துசிரம
பிணைந்துகரம பணிந்துபதம்
தும்பிமுகனைப்பணிந்து போற்றுவார் கந்த
சாமியை நினைந்து மனந்தேற்றுவார்.

மூத்திபெற்ற அய்யன்பாதம் நத்திநித்தம் தித்தத்தி
விருந்திடும்பேர் தங்கள்வினை தீர்திடும் யேனோ
பக்தியோடிருந்த பேரைக்காத்திடும்
காருந்துணை தாருமருள்
கூருவருரு நாதன்றனை
குஞ்சரம் வலப்பக்கம் வைத்துக்கொண்டவர் அய்யன்
தஞ்சமென்ற பேர்களைக்கின்றவர்.

சொர்க்கலோகம் பெற்ற ஐயன் இக்கலியுகத்தில் மெய்யன்
தொண்டர்கள் பணியும்புஜேகனே கன
மண்டலாதிபர் போற்றியமெயவாசனே
மார்களித்திரு வாதிரைக்கருள்
காரணப்பசு வானகற்பக
காச்சிபெரும் பூவுலகிலேயனே கயிலே
ஆச்சிபெரும் அய்யன்பதி மெய்யனே.

கங்காழகுலத்துதித்தங்காண்டி மகனுண்டியங்
கவிதனக்கருள்புரியுமையனே யென்

கலியகற்றியாள்குவாயென் மெய்யனே
காலன்வரு வேளைக்கொரு
பேழைப்பர தேசிக்கருள்
கார்த்துநீரேளைமுகம் பாரையனே யெனை
பார்த்து ஆதரித்திடுவாய் மெய்யனே.

## காவடி சிந்து முற்றிற்று.

---

### வெண்பா.

வையகமெலாந்துதிசெய் மா வாழைக்கோட்டத்தின்
அய்யன்மேல் சிந்துகவி பான்பாட—மெய்யுலகத்
தையா யுனைப்பணிவோர்க் கருள் தருகுமெஞ்ஞான
ஐயாவுன் பாதமே காப்பு.

### வர்ணதினமா வேன்கிற வர்ணமெட்டு.

அலைசரஸபதித்தாயே
நாவில்நீயே வருவாயே கலை
வாணியருள் தருவாயே
வளுவாமலென் கருள்நாவினில்
கலைமாதேயுன் னருள்பால் கொடுங்
காரணியான பூரணியே வேத
நாரணி லோக காரணியே.

மண்டலத்திலைய்யன்பதியே
வாழைநதியே சொற்கப்பதியே
வலப்பக்கமாய்க் கிணேசன் சன்னதியே
வருவார்திரு மதிவேணுலைங்
கிடமாம்படிக் கிணர்நீர்தனில்
மூள்கினவர் பெருங்கதியே புண்ணியம்
முத்திபெருங்கங்கா நதியே,

ஓடிவந்தார் பலர்கோடி
உனைத்தேடி பதிநாடி அரு
ளுன்பதம் போற்றியே பாடி
உலைவாய்மெழு கதுபோலுரு
கிடநோய்விடி மதுதிரவே
உந்தனபாதம் வந்துதேடி அய்யன்
செந்தாமரைப்பதம் நாடி.

கைக்காவடி பால்க்கொண்டு வருவார்
உனைத்தொளுவார பதம்பெருவார் அய்யன்

பாரதத்தில் பால்கொண்டு ெ[illegible]வார்
பணிவோருனை நினைவார்தினம்
பெறவே நவம் தருவாய்சுகம்
பெண்டுபிள்ளையுடன் வருவார்   அய்யன
சன்னதிகண்டு கண்டுமே தொளுவார்.

யெந்தனைக்கார் தருள்வாயே
தந்தை நீயே லச்சிபபாயே   யெம்
தெண்டினை வருகுமுன் நீயே
இதுவேளையி யெனையாதரி
பலநோய்களு மதுபோகவே
பரவமுநீக்கிடுவாயே   உந்தன்
பாதமே தந்தருள் நீயே.

இரண்டு பக்கத்தில் ரண்டூரும்
வராககநாடாம் நொய்யவாரும்   கொங்கு
தேசத்தில் மேர்க்கே பேரூரும்
நாடுஞ்சிதம் பரமாந்திரு
வாடுந்துறை ஸத்தவந்தோரெங்கு
நாடியே சுற்றி வந்தாரும்   அய்யன்
தேடியே முத்திபெற்றும்.
சுற்றிலுங் கோட்டததின் சிரப்பு
அய்யன் பொருப்பு ஜனம மதிப்பு   வருந்
துஸ்ட்டருககே மனக்கொதிப்பு
சூழுந்திரு வேலும்மணி
பாலும்பழம நாளுந்தினம்
கொண்டுவந்தாகள் முன் நடப்பு   கற்
கண்டுடன் தேனும் பாவினிம்பு.

அய்யன் மனமது மகிளந்து
அருள்நிறைந்து புனுகணேந்து   வல
தெங்குமருளது நிறைந்து
அருமாமறை முனிவோர்களும்
பெருமாள்வாழை பதிகோவினில்
அன்புடனே மனமகிளந்து   அய்யன்
இன்படனமும் புரிந்து.

வாழி.

ஆனைமாமுகவன்வாழி ஆர்முகம் வேலன்வாழி
பானுவும மதியும் வாழி பரமன் மாலயனும் வாழி
தேனினுமினுமைவாணி தேவிசாமுண்டிவாழி
மானிலமாளும் ராசர்மன்னர் செங்கோல் வாழிமாதோ.

முற்றிற்று.

## மாரியம்மன் விருத்தம்.

தாணியிளை சுந்தரி சிவகாமியந்தரி
சடாதரி மனோன்மணி நீ
சத்திசிவ ஓங்காரி ரீங்காரி ஆங்காரி
சகலகலை கற்றவளு நீ
கருணைமிகு மந்தரி பகவதி துரந்தரி
கண்ணனூர் வாள்பவளு நீ
கருவலூர் குடிகொண்ட சூலக்கல் மாரி நீ
கண்ணாயிரமுடையவளு நீ
அருணகிரி நாதருடனே நடன சிங்காரி
அம்பிகையானவளு நீ
ஆனந்தபூரணி மோகன கல்யாணி நீ
ஆதியாய வந்தவளு நீ
தருணமிது மிகுவெனஙு சரணமென வருபவரை
தர்க்கார்த்து லச்சியம்மா
தண்மைமிகு மாமையன் பதியில் வழர் பொன்மாரி
தாயே பருசத்தியே.

பார்கடைக் கண்ணாலே யம்மணி-யெனக்கருள்செய்
யூர்வடக்கில் மாரியம்மணி
பார்கடைக் கண்ணாலே நீயும்
பேர் படைத்தையன் பதியில்
யேர்பெருத்திடுங்குடிகள்
உளர்தனைக் கவந்தருள்செய்
மாரியே உபகாரியே
பெளில் விரியே ஒய்யாரியே யேனை (பார்கடை)

ஆதிகருவூரில் பிரந்தாய் அழகானதேவி
ஆன கண்ணனூரில் வழர்ந்தாய்
சோதிபோல் முகம்படைத்தா
துஸ்ட்டர்களைத் தியெரித்தாய்
நீதியாயுலமெங்கும்
ஓதியே நீ முதடுெத்த
நீலியே பெலசாலியே
திருமாலியே கபாலியே-யெனை (பார்கடை)

ஆயிமகமாயிகவுமாரியே ஐயம்பதியை
ஆண்டுவரும் தேவியுமைசாலியே
தாயுமேதா நீயிருக்க
யாதுவரும் நோய்விலக்க
யேதுபயம் யெங்களுக்கு

ஆதரவு தந்த வரம்
தாருமே மகமேருமே
கண்ணால் நீயுமே முகம்பாருமே யென்னை (பார்கடை)

அகோரப் பல்லுடைய மாரியே   கொண்டவந்தலையில்
கொழுந்துவிட்டெரித்த நீலியே
பூரணகும்பமும் வைக்க
நேரமு முனையழைக்க
காரணமாய் வந்தகவு
மாரியுமை நின்றபரஞ்
சோதியே அருளாதியே
சந்தனாதியே கலத்தூரியே யென்னை (பார்கடை)

சிங்கவாகனங்களேறு மாரியே   மகிடா
சூரனைத்செயித்திடு மோங்காரியே
சங்கரன் கிருபைபெற்ற
மங்கையுமை மாரியம்மன
பொங்கல புஜகமுல
யெங்குமே நிறைந்திடுஞ்
சிஙகாரியே ரீங்காரியே
கெம்பீரியே வோஙகாரியே் யென்னை (பார்கடை)

ஆயிரங்கண்பெற்ற மாரியே   உலகினிலே
ஆடுபெலிகொண்ட நீலியே
காய்சுதலி மாவுதேனு
தாயதனக்கு மூனபடைத்த
ஆவிகொண்ட மாரியம்மன்
பாவிபெற்ற பாலரைக்கண்
பாருமே மூத்தாரமே
தொழுவோருமே சுகந்தாருமே யென்னை (பார்கடை)

கொஞ்சுங்கிளிவாய் திரந்துபேசியே   மக்களருமை
வஞ்சியே நீ பெற்ற மகளுசியே
தஞ்சமென்ற பேர்களுக்கு
வஞ்சகனு செய்பாதேபம்ம
பஞ்சை நான் படுந்துயரம்ம
கொஞ்சியுன் செவியில் கேளும்
கோரியே ஒய்யாரியே
சிங்காரியே அலங்காரியே யென்னை (பார்கடை)

பொன்னரகம் பெற்ற கவுமாரியே   பூவோடுகம்பம்
போட்டுவிளையாடும் பரஞ்சோதியே

கொங்குலக மீதிலரு
ளெங்குமே நிரைந்தகரு
வூரிலே பிரந்த முத்து
மாரியுன் மன்னத்தில் விளை
யாடுவார் ஜனங்கூடுவார்
கொண்டாடுவாருனை பாடுவர் தினம் (பார்கடை)

பிர்மகுலம்தன்னில் பிரந்தாய் செமதக்கினிக்கி
தர்மபத்தினியாக வழர்தாய்
பூர்வசென்மத்தா லுதித்த
பார்வனத்துக்கே படைத்த
காரணம் பொருந்துந்தலை
மாரியென்றுபேர்படைத்த
காரணி பரிபூரணி
வேதகாரணி பழயணி யெனை (பார்கடை)

உந்தன் சன்னதியில் பள்ளிக்கூடமே பிள்ளைகளை
யோதிவைக்கும் உபாத்தியார் தானபாடுமே
உந்தருளெந்தனுக்கு
தந்துவரம் நீ கொடம்மா
யெந்தன் கவிதீரக்கவந்த
சுந்தரிபருக்கு வும்மை
தொழுதுகானுன தடியினை துதிபெர
பழுதுவராமலே் பாதுகார்தெனை (பார்கடை)

கங்காழகுலத்திலுதித்த அங்கான்டிசேயன்
கவிககருள்புரிந்திடுமாதகா
மங்காத செல்வந்தருக
வரந்தருமருள்பெருக
கங்காழ தாசன்தொழுக
அன்பாக மனதிரங்கி
ஆளுமே தினம் நாளுமே
தொழுவோருமே சுகந்தாருமே யெனை
(பார்கடைக்கண்)

(முற்றிற்று.)

கிருஷ்ண விலாச பிரஸ், கோயமுத்தூர்.